தொல்காப்பியப் பொருளதிகார புறத்திணை மரபுகள்: உருமாற்றத்தின் சமூக - வரலாற்றுப் பின்னணியும் தாக்கமும்

The External Traditions of the Tholkappiyam's Literary Categories:The Social-Historical background and impact of transformation

ப.ஷங்கரி / P. Shankari[1]
பா.ஜெய்கணேஷ் / B. Jaiganesh[2]

Date of submission: 2025-06-06
Date of acceptance: 2025-06-28
Date of Publication: 2025-07-23
Corresponding author's Name:
P. Shankari
Email: shankaritpselvam2001@gmail.com

Abstract

The Purapporuḷ Veṇpāmālai, which emerged as a development of the Tolkāppiyam and is based on the Paṇṇirupadalam tradition, reflects the changing conditions of Tamil society through External (Purapporul) related concepts. The Tolkāppiyam embodies traditional stances, while the Purapporuḷ Veṇpāmālai mirrors the transformations that occurred in that context. Significant changes took place in Purapporuḷ-related thought during the period of Kaḷappirar rule. Various scholars of different religious traditions adapted grammatical rules to suit their philosophies and the prevailing literary trends. Such changes appear to have been implemented by Aiyanār Iṭanār in response to social changes, particularly in the structure of the Kaikkilai and Peruntinai divisions. This study aims to extensively explore these traditional divisions and their transformations, focusing on: 1) The background of changes in External (Purattinaiyiyal)—the study of Purapporuḷ meaning. 2) The background of changes in the terms "Tinai" and "Padalam." 3) The background of changes in the classification system of Uzhiṉai and Nochiṭṭinai divisions. 4) The background of conceptual changes in the Kañcitinai division. 5) The differing perspectives of commentators on the classification of Tinai. Using the commentaries of Ilampūraṇar and Naccinārkkiṇiyar, who provided expositions on Tolkāppiyam's Purattinaiyiyal, it is evident that the term "Tinai" came to signify an unconventional meaning related to "poruḷ" (meaning or content). Ilampūraṇar specifically refers to "poruḷ." We understand that commentators used the term "poruḷ" in the

[1]The author is a Research Scholar in the Department of Tamil, College of Science and Humanities, SRM Institute of Science and Technology, Kattankulathur Campus, Chengalpattu. shankaritpselvam2001@gmail.com

[2]The author is an Associate Professor in the Department of Tamil, College of Science and Humanities, SRM Institute of Science and Technology, Kattankulathur Campus, Chengalpattu. ilamarantamil@gmail.com

sense of "purpose" or "significance" of something. Similarly, although the word "Padalam" is mentioned in the Purapporuḷ Veṇpāmālai, there is no clear indication that commentators referred to it in their explanations. Regarding the categorization system of Uzhiṉai and Nochiṭṭinai divisions, changes can be assumed based on the versions of manuscripts obtained through U.V. Swaminatha Aiyar's editions. The instability resulting from war, as described by Tolkāppiyar, is elaborated upon in the Kañcitinai division. Thus, the Purapporuḷ Veṇpāmālai, by discussing the war division and instability, helps us perceive social change. Even though the number of External divisions increased from seven to twelve, commentators continued to uphold the traditional seven. This entire evolution can be understood through this investigation. Hence, the article decodes the nuances and the in-depth details between tradition and transformation of External Traditions from the viewpoint of Tholkappiar.

Keywords: Tholkappiyam, Purapporuḷ Veṇpāmalai, Kaḷappirar rule, social changes, Transformations, Grammar commentators.

ஆய்வு அறிமுகம்

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணை, புறத்திணை ஆகிய இரு பிரிவுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருந்தாலும், பிற்காலத்திய இலக்கணப் பாகுபாடுகளுக்கு வழி வகுப்பதாகத் திகழ்கிறது. இலக்கண வரலாற்றுப் பின்புலத்தை நோக்கும்போது, தொல்காப்பியத்தின் காலத்தினைக் கி.மு 5-ம் நூற்றாண்டு என்றும் புறத்திணைச் சார்ந்த கருத்துகளை விளக்கும் வகையில் கி.பி 10-ம் நூற்றாண்டிற்கு முன்பு இயற்றப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலையானது, தொல்காப்பியம் மற்றும் பன்னிருபடலத்தினை முதல்நூலாகக் கொண்டு தோற்றியது. தொல்காப்பியப் பொருளதிகார உரையாசிரியர்களான இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் முறையே கி.பி 10- 14ம் நூற்றாண்டின் பிற்பகுதியினர் என்று கருதலாம். தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலைப் போன்ற நூல்கள், திணைச் சார்ந்த ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் அமைந்த போர் முறைகளை விவரிக்கின்றன. போரின் நோக்கில், சமூகத்தின் நிலைப்பாட்டினைத் திணையும் அதன் படிநிலைகளைத் துறையும் தெளிவாக உணர்த்துகின்றன. இனக்குழு வாழ்க்கையில் தொடங்கி, பல்வேறு படிநிலைகளில் சமூக முன்னேற்றத்தில் போர் முறைகள் எவ்வாறு வளர்ச்சியடைந்தன, அவற்றின் நெறிமுறைகள் மற்றும் நிகழ்முறைகள் எவ்வாறு உருவாயின என்பன விளக்கப்பட்டுள்ளன. சொற்களின் பொருண்மை (திணை - பொருள்), சொல் மாற்றம் (திணை - படலம்), திணைகளின் வரிசை முறைமாற்றம் (உழிஞை - நொச்சி), கருத்தியல் மாற்றம் (காஞ்சித்திணை), சமூக, வரலாற்றுச் சூழல்களுக்கு ஏற்ப உருமாற்றம் அடைந்த நிலையில் உரையாசிரியர்களின் திணைவேறுபாட்டுச் சிந்தனைகள் ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புறத்திணை இலக்கண மரபும் அதன் நீட்சியும்

மறவர்களின் மாண்புகளை ஆவணப்படுத்தும் ஊடகமாக விளங்கியவையே புறத்திணைகள். தொல்காப்பியத்தின் வாயிலாகவே புறத்திணை இலக்கண மரபுகளைப் பற்றி அறிய முடிகிறது. தொல்காப்பியர், அகத்திணையியலில் புறத்திணை மருங்கின் (58) என்றும் புறத்திணையியலில் அகத்திணை மருங்கின் (59) என்றும் உரைப்பதன் மூலம் இரண்டும் ஒன்றையொன்று தொடர்ந்தது என்று அறிகிறோம். இத்தகைய புறவொழுக்கமானது அறத்தோடு பெற்ற பொருளையே நிலைகளனாகக் கொண்டது என்று தெரிகிறது. அதனை,

> 'புறப்பொருள் பெரும்பான்மை அறமும் பொருளும் பற்றியே நிகழும் என்று கூறுவர் இலக்கண நூலார்'. (சுப்பு ரெட்டியார், 2002)

என்று குறிப்பிடுகிறார். முதற்சங்கத்திலும், இடைச்சங்கத்திலும் இலக்கண நூலாக விளங்கிய தொல்காப்பியத்தில் மக்களின் வாழ்க்கை முறையினைப் பிரதிபலிக்கும் பொருளிலக்கண மரபினை அயலவர்களின் வருகையினால் முழுநிலை வரலாற்றினை அறிய இயலவில்லை.

> மரபுகளில் ஏற்படும் மாற்றம் காரண காரியத் தொடர்புடையது. இலக்கணத்தைப் பொறுத்த வரையில் பிரதியை மரபாகக் கருதுவோமேயானால் வழக்கும் செய்யுளும் மாறுவதற்கான எல்லாத் தகுதியும் உடையன. இம்மாற்றங்களை ஓரளவு காரண காரியத்தோடு விளக்க முடியும். இம்மாற்றம் வளர்ச்சியை நோக்கியது.
>
> *(Raachaaram, 2010)*

இவ்வாறு, தமிழ் இலக்கண மரபு மூன்றிலக்கணங்களில் இருந்து மாற்றம் அடைந்து, பல்வேறு நிலைகளில் வளர்ச்சி கண்டது. இம்மரபின் உட்பிரிவாக விளங்கிய புறத்திணையியல் சார்ந்த கருத்துகள், தனி இலக்கண நூலாக உருப்பெற்றன. தொல்காப்பியம் மற்றும் பன்னிருபடலம் வகுத்த திணைகளை, பகுத்தும், அமைப்பு நிலையில் மாற்றங்கள் ஏற்படுத்தியும், புறப்பொருள் வெண்பாமாலை எனும் நூல், வழி நூலாக உருவானது.

> "அகலிடத் தவர்க்கு மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க" (பு.வெ.மா சிற.பா 9-10) "புலப்படுத்து இருளறப் பொருள்விரித்து எழுதினன்"
>
> (அ.பொ.வி சிற.பா 12)

புறப்பொருள் வெண்பாமாலையின் சிறப்புப்பாயிரமும், அகப்பொருள் விளக்கத்தின் சிறப்புப்பாயிரமும் பரந்த நிலத்திடையே குற்றமில்லாது புறப்பொருள் இலக்கணம் அறியவும் அவ்வாறே அகப்பொருள் இலக்கணமும் உரைக்கின்றது. மக்களிடையே பொருளிலக்கணம் செல்வாக்கு இழந்திருந்தது என்பதனை மேற்கண்ட வரிகள் தெரிவிக்கின்றன. இவ்விரு நூலிலும் அகத்தியரைப் பற்றியும் பன்னிரு மாணவரைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகிறது. அவ்வாறே திணை என்ற சொல்லுக்கு ஈடாகப் பொருள் என்ற சொல்லானது கையாளப்பட்டது நோக்கதக்கது. இந்நிலையில் தான் தொல்காப்பியத்தின் பொருளிலக்கண மரபானது பகுக்கப்பட்டுத் தனித்தனி இலக்கணங்களாகத் தமிழ்ச் சமுகத்தில் இனம் காணப்பட்டது.

> வெவ்வேறு காலத்திற்கேற்ப, வெவ்வேறு நாட்டுக்கேற்ப, வெவ்வேறு சமூகத்திற்கேற்ப, வாழ்க்கைப் பற்றிய கருத்துக்கள் வெவ்வேறாக அமைகின்றன. மற்ற வாழ்க்கை நெறிக்குரியவர்கள் முன்னவர் வாழ்க்கை நெறியைப் பின்பற்ற முயலுதல் இயல்பு. இத்தகைய மாற்றம் தவிர்க்க இயலாதது. உலகப் பொது நியதிக்குத் தமிழ்ச் சமுதாயம்விதிவிலக்க ன்று.
>
> *(Ambika, 2023)*

மேற்கண்டக் கூற்று மூலம் தொல்காப்பியத்தின் வளர்ச்சிப் போக்காகவும், பன்னிருபடலத்தை அடிப்படையாகக் கொண்டும் எழுந்த புறப்பொருள் வெண்பாமாலை, விவரிக்கும் புறப்பொருள் சார்ந்த கருத்துகள் தமிழ்ச் சமூகத்தின் மாற்றமடைந்த நிலையை எடுத்துக்காட்டுகின்றன. தொல்காப்பியம் மரபு சார்ந்த நிலைப்பாட்டையும், புறப்பொருள் வெண்பாமாலை அந்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களையும் பிரதிபலிக்கின்றன. இவ்விரண்டையும் மையமாகக் கொண்டே பிற்கால இலக்கண ஆசிரியர்கள் தமது கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றனர்; மேலும் மறுக்கின்றனர்.

உருமாற்றத்தின் சமூக–வரலாற்றுப் பின்னணியும் தாக்கமும்

சமூக மாற்றங்களுக்கு ஏற்ப, தொடக்கக் காலங்களில் வழங்கப்பட்ட மரபு சார்ந்த முறைகள் பல்வேறு பரிமாணங்களை அடைந்து, அவற்றின் தன்மைகளில் உருமாற்றம் பெறுகின்றன. இலக்கண நூல்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. பிற்காலத்தில் இவை தனித்தனிப் பிரிவுகளாகப் பரிணமித்தன. இவ்வாறாகத் தொல்காப்பியர் வகுத்தளித்த அகம், புறம் என்ற பொருள் இலக்கணக் கூறுகள் மரபாகத் திகழ்கிறது. ஆயினும் புறம் சார்ந்தவைகள் காலஞ்செல்லச் செல்ல வீழ்ச்சி

அடைந்ததைக் காணலாம். மரபாக நின்று வழி நடத்துகின்றதே அன்றி இலக்கண வரலாற்றிலும், சமகாலத்திலும் பெரும்பான்மையாக அகத்திணைக் கருத்துக்களே திகழ்கிறது.

> "தொல்காப்பியம்" பொருள் இலக்கணத்தை அகம், புறம் என வாழ்வியல் இலக்கணத்தை வகுத்துள்ளது. தொல்காப்பியரின் இவ்விரு பொருள் இலக்கணக் கூறுகள் இன்று வரை தமிழ் சமூகத்தை வழிநடத்தும் மரபாகப் போற்றப்படுகின்றன (Ambika, 2023)

ஒரு குறிப்பிட்ட முறைசார்ந்த ஒழுக்க நெறியையே திணை என்பது மரபு. கருத்துகளை வெளிப்படுத்தும் நூலாசிரியர்களுக்கான நெறிமுறைகளையும் வழிமுறைகளையும் வகுப்பதாகத் திகழ்ந்தது. இதன் வாயிலாக, சமூகத்தில் நிலைபெற்ற திணைகளில் எவற்றில் பெயர்களைக் குறிப்பிடலாம், எவற்றில் தவிர்க்கலாம் என்ற வரையறைகள் மூலம் ஒழுங்குமுறைகளைப் புரிந்துகொள்ள முடிந்தது. இதனைக் கீழ்கண்ட கூற்று மெய்ப்பிக்கிறது.

> புறவயமான சமூகத்தன்மை கொண்ட, விளக்கத்தன்மை கொண்ட கதையாடல் கூறுகள் மிக்க புறம் கவிதைகள் மறுபிரிவின என்று கெ. அய்யப்ப பணிக்கர் எடுத்துரைக்கிறார் (திணைக்கோட்பாடும் தமிழ் ஆய்வுச்சூழலும் 2018).

ஒரே நெறியின் கீழ்த் தொல்காப்பியப் புறத்திணையினையும், புறப்பொருள் வெண்மாலையினையும் காணவியலாது. ஏனெனில் இரண்டும் வெவ்வேறு மரபிலிருந்து கிளைத்தவை என்று உரைப்பதற்கான மறுப்பினை அந்நூலின் பாயிர அடிகள் புலப்படுத்துகின்றன. இதன் விளைவாக, தொல்காப்பியரின் புறத்திணைச் சார்ந்த கருத்துகளை, பன்னிரு புலவர்கள் மற்றும் ஐயனாரிதனார் ஆகியோர், தத்தம் காலகட்டத்திற்கு ஏற்ப மறுஉருவாக்கம் செய்தனர் என அறியமுடிகிறது.

> தொல்காப்பியன் முதல் பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த பன்னிரு படலமும் பழிப்பின்று உணர்ந்தோன் (பாயிரம். 4-6 பு.வெ)

தமிழக வரலாற்றுப் பின்னணியில், புறத்திணை மரபில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான காரணங்களை அறிகிறோம் என்று கொள்ளுவதில் தவறு இல்லை. களப்பிரர் ஆட்சியின் போது, புறப்பொருள் சார்ந்த கருத்தியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பல்வேறு சமய அறிஞர்கள், தமது தத்துவங்களுக்கு ஏற்பவும், இலக்கியப் போக்குகளுக்கேற்ற வகையிலும் இலக்கண விதிகளைத் திருத்தியமைத்தனர். இதன் விளைவாக, அகம், புறம் எனும் முதன்மைத் திணைப் பாகுபாடு, அகப்புறம் மற்றும் புறப்புறம் போன்ற புதிய பிரிவுகளுடன் இணைந்து பரிணாமம் அடைந்தது.

> புறப்பகைவரைப் போரிலே கொன்று வெற்றி பெறுகிற உலகியல் வெற்றியைவிட அகப்பகையை வென்று வெற்றி கொள்வது சிறந்த உயர்ந்த வெற்றி என்னும் புதிய கருத்தைச் சைனரும் பௌத்தரும் உண்டாக்கினர். (Venkatasami, Mayilai Seeni, 2013)

சமயக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு போர்கள் எதுவும் நிகழ்ந்ததாக வரலாறு பதிவு செய்யவில்லை. இருப்பினும், அவை அவரவர் எழுத்துகளில் வெளிப்பட்டன. அகப்பகைகளை வெல்கிற வெற்றியை விட மேம்பட்ட வெற்றியாகக் கருதப்பட்டது எனப் புறப்பொருளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியரான ஐயனாரிதனார் சைவர் ஆயிற்றே? எனின் சைனரும் பௌத்தரும் இந்நெறியினை வகுத்த பின் சைவரும் வைணவரும் அகப்பொருள் கருத்துகளில் மாற்றத்தினை உண்டாக்கினர். சைவ மரபினைச் சார்ந்த ஆசிரியர், தொல்காப்பியரால் அகத்திணையில் வகுக்கப்பட்ட கைக்கிளை மற்றும் பெருந்திணை எனும் உள்ளடக்கங்களைப் புறத்திணையில் வகைப்படுத்தியுள்ளார். ஆயினும், பன்னிருபடலத்தினை முதன்மை நூலாகக் கொண்ட புறப்பொருள் வெண்பாமாலை, அந்நூலினைப் பின்பற்றுமாயின், மரபுசார்ந்த தொல்காப்பிய உரையாசிரியர்கள் புறத்திணையியல் குறித்து விளக்கமளிக்கும்போதும், மேற்கோளாகப் பன்னிருபடலத்தைச் சுட்டும்போதும்,

அகத்திணையியலில் கைக்கிளை, பெருந்திணைக் குறித்த விளக்கங்களில் மாறுபட்ட கருத்தினை முன்வைத்ததாகச் சான்றுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, இத்தகைய மாற்றமானது, ஐயனாரிதனாரால் சமூக மாற்றங்களின் காரணமாகக் கைக்கிளை மற்றும் பெருந்திணைகளின் திணையமைப்பில் மேற்கொள்ளப்பட்டது என்பது தெரிகின்றது.

1. புறத்திணையியல் – புறப்பொருள் பொருண்மை மாற்றத்தின் பின்னணி

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் அகத்திணையியலுக்கு உரைகூறுகையில் திணை என்னும் சொல்லிற்கு ஈடாகப் பொருள் என்ற சொல்லினைக் கையாண்டுள்ளார். அதனை

> “அகப்பொருளாவது. போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார். புறப்பொருளாவது, மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் புலனாதலின் புறம், என்றார்.” *(இளம்பூரணர்)*

என்று குறிப்பிடுகிறார். புறத்திணையியலிலும் விளக்கம் கூறுகையில் புறப்பொருள் என்றே குறிப்பிடுகிறார். இளம்பூரணர்த் திணையினைப் பொருள் என்று உரைக்க நச்சினார்க்கினியர்த் திணை என்றே கூறுகிறார். திணை என்ற சொல்லின் பொருள் குறித்து பிங்கல நிகண்டு பின்வருமாறு வரையறுக்கிறது.

> “குலம் நிலம் ஒழுக்கமுந் திணையே” *(பிங்கல நிகண்டு – 3641)*
>
> திணை என்ற சொல் ஐந்திணையை மட்டும் சுட்டி நிற்கவில்லை மாறாக் குலம், நலம், ஒழுக்கம் ஆகிய மூன்றும் இணைந்து நிற்கும் தன்மையையும் திணையெனக் கருதப்பட்டுள்ளது தெளிவாகின்றது.
>
> *(Seetharaman, Saravanajothi, 2020)*

இங்கு, குலம் என்பது அகத்திணைச் சார்ந்த இல்லற வாழ்க்கையையும், நிலம் புறத்திணைக் களமாக அமைந்து உலகப் பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒழுக்க நெறிகளுடன் இயங்கும் வாழ்வியல் கூறுகளையும் 'திணை' என இலக்கணம் வகுக்க வழிவகுக்கின்றது.

> தொல்காப்பியம் பண்டைய தமிழ்ச் சமூக, பண்பாட்டு, அரசியல் கருத்தாடல்களின் பல்வேறு பரிணாமங்களை ஆவணப்படுத்தியுள்ளது. இப்பதிவுகள் தமிழ்ச் சமூகத்தில் வழங்கிய கருத்துகளின் தொகுப்பு என்பதையும் அவை, கால வரிசைமுறையில் பதிவு செய்யப்படவில்லை என்பதையும் காலம் குழம்பிய நிலையில் பதிவுபெற்றுள்ளன என்பதையும் உணரவேண்டியுள்ளது.
>
> *(Pazhanivelu, 2024)*

மேற்கண்ட கூற்றானது, தமிழ்ச் சமூகத்தின் முக்கியமானதொரு தடயங்களாகத் திகழும் தொல்காப்பியத்தில் காணப்படும் கருத்துகள், கால வரிசை முறையைப் பின்பற்றவில்லை. நூலாசிரியர்ப் பல்வேறு காலகட்டங்களில் வழக்கிலிருந்த மரபுகளை வரையறைச் செய்ததன் விளைவாகவே இது கருதப்படுகிறது. தொல்காப்பியத்தில் திணை, பொருள் என்ற இரண்டு சொற்களும் கையாளப்பட்டுள்ளதை அறியலாம். பொருள் என்ற சொல் பயன்பாட்டில் இருப்பினும், தொல்காப்பியப் புறத்திணையியலில் அதனை எடுத்தாளவில்லை என்பது நோக்கதக்கது. திணை என்ற சொல்லினை அகத்திணையியல், புறத்திணையியல்(1), செய்யுளியல், மரபியல் எனவும் பொருள் என்ற சொல்லினை அகத்திணையியல், புறத்திணையியல் (3), களவியல், கற்பியல், பொருளியல், மெய்பாட்டியல், செய்யுளியல், மரபியல் எனவும் எடுத்தாளப்பட்டுள்ளது. மைந்து பொருளாக வந்த வேந்தனை (70) அதுவலி பொருளாகப் போர்க் கருதி வந்த (இளம்) பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்(65) பகைவரைப் பொருளாக மதியாது செலுத்தினப் பேர் ஆண் பக்கமும் (இளம்) பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்(75) அறம் பொருள் இன்பம் மூன்றினும் அறனும் இன்பமும் அன்றி ஒழிந்த பொருளோடு பொருந்திய பக்கமும் என்றுமாம்(இளம்) நச்சினார்க்கினியரும் எவ்விதக் கருத்துமாறுபாடு ஏற்கிறார். எனவே இம்மூன்று கருத்துகளையும் உரையாசிரியர்களின்

வழிநின்று ஆராயின் ஒன்றின் பொருட்டு என்ற பொருள் பெறப்படுகிறது. ஆகவே தொடக்கக்காலத்தில் ஒழுக்கமாகத் திகழ்ந்தவை வேற்று அரசர்களின் வருகையினால் பொருள் என்ற சொல் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது எனக் கருதலாம்.

2. திணை – படலம் சொற்களின் மாற்றத்தின் பின்னணி

தொல்காப்பியத்தில் திணை என்ற சொல்லுக்கு இணையாகப் புறப்பொருள் வெண்பாமாலையில் 'படலம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியர்த் தத்தம் உரையில் வெண்பா-காஞ்சி, பு-வெ-காஞ்சி என்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இருவரும் படலம் என்ற சொல்லினைச் சுட்டவில்லை என்பது தெரிகிறது. இந்நிலையில் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தோற்றம் பெற்ற நன்னூல் பொதுப்பாயிரத்தில் படலம் என்ற சொல்லிற்கான இலக்கணத்தை விவரிக்கின்றது.

> ஒரு நெறியின்றி விரவிய பொருளால்
> பொதுமொழி தொடரின் அதுபடலம் ஆகும். *(நன்னூல் 17)*

ஒரு வழி இனப்பொருள் இல்லாமல், பல்வேறுபட்ட இனப்பொருள்களால் கலந்து, பொதுவகையாகக் கூறினால், அது படலம் என்னும் உறுப்பாகக் கருதலாம். இம்முறையையே வெட்சித்திணை என்பது வெட்சிப்படலம் என்று காலத்தால் பிற்பட்ட நன்னூலின் வழி நின்று உரைக்கலாம். இதன் மூலம், தாம் அறிந்த அல்லது வழக்கில் இருந்த புறநூல்களின் கருத்துகளின் தொகுப்பாகக் கொள்ளலாம். ஆகையால், திணை என்ற சொல்லானது வழக்கற்று; படலம் எனும் சொல் பெருவழக்காயிற்று என்பதை அறியலாம். இதனை,

> இலக்கியப் பின்னணி - அரசியல், சமூகப் பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றுக்கும்- அந்தக் கால இலக்கியத்துக்கும், இலக்கணத்துக்குமுள்ள உறவையும் ஆராய வேண்டும் *(Sanmugam, 2013)*)

சண்முகம், செ.வை. கூற்றின் வழி எடுத்துரைகிறார். இக்கருத்தினை மையமாகக் கொண்டு ஆராய்வதன் வழி, தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இரண்டின் உருவாக்கச் சூழலை உணர இயலும். இதன் மூலம் சமகால இலக்கியங்களின் வழி இலக்கணத்தின் நிலையினை அறியலாம். ஏறக்குறைய கி.பி. 9 -10 நூற்றாண்டில் இயற்றபட்ட தழுவல் காப்பியமான கம்பராமாயணத்திலும் படலம் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. ஆகவே படலம் என்ற சொல் திணைக்கு இணையாக பயன்படுத்தி இருப்பதை அறியலாம்.

3. உழிஞை – நொச்சித்திணைகளின் முறை மாற்றத்தின் பின்னணி

தொல்காப்பியத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஏழு திணைகளுள், மூன்றாவதாக உழிஞைத்திணை அமைந்துள்ளது. இது, மதில் முற்றுகை, மதில் காத்தல், மற்றும் இருவருக்கும் பொதுவான துறைகள் எனும் மூன்று முக்கியப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. பிற்காலத்தில் எழுந்த புறப்பொருள் வெண்பாமாலையில், பன்னிரண்டு திணைகளுள் மதிற்போர்த் தொடர்பான செய்திகள் நொச்சிப்படலம் மற்றும் உழிஞைப்படலம் ஆகியவற்றில் வகைப்படுத்தப்பட்டு, அமைப்பு முறையில் மாற்றங்கள் நிகழ்ந்தன. உழிஞைத்திணைக்கான இலக்கணத்தை வகுத்த தொல்காப்பியர், முழுமையான மதிலை எதிரிகள் முற்றுகையிடுவதையும், அதனை உரியவர்கள் பாதுகாப்பதையும் மரபாகக் குறிப்பிடுகிறார்.

> முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
> அனை நெறி மரபிற்று ஆகும் என்ப. (தொல் 66)

அகத்தோன் வீழ்ந்த நொச்சி எனும் துறைப் பிற்காலத்தில் நொச்சிப்படலம் என அறியப்பட்டது. இவ்விரு மரபுகளின் ஒருங்கிணைவு, காலப்போக்கில் மாற்றமடைந்தது. மரபு வழி முற்றுகையிடுதல், பாதுகாத்தல் என்றிருந்த நிலை, பிற்காலத்தில் பாதுகாத்தல், முற்றுகையிடுதல் என மாறியது. தொல்காப்பியப் புறத்திணையியலில் விவரிக்கப்பட்ட உழிஞைத்திணை முன்னிலைப்

பெற்றது. ஆனால் புறப்பொருள் வெண்பாமாலையில் வைப்புமுறை மாற்றம் பெற்றவற்றைக் குறிப்பிடுமாறு தம் பதிப்புரையில் (புறப்பொருள் வெண்பாமாலை (1895) முதற்பதிப்பு முன்னுரைப் பக்.ச-ரு) பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> உழிஞைப் படலத்தின் பின்னிற்றற்குரிய நொச்சிப் படலம் எல்லாப் பிரதிகளிலும் அதற்கு முன்பே காணப்பட்டமையால். அது அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது. (டாக்டர்.உ.வே சா.இலக்கணப்பதிப்புகள்,ப.29)
>
> முதன்முதலில் பதிப்பிக்கப்பட்ட இலக்கணநூல் புறப்பொருள் வெண்பாமாலையே என்பர். 1894இல் அய்யர் அவர்கள் புறநானூறு பதிப்பிக்கும் போது திணை, துறை விளக்கங்கள் எழுதப் புறப்பொருள் வெண்பாமாலை மிகவும் பயன்பட்டது.
>
> (உ.வே.சா பதிப்புப்பணியும் பன்முக மாட்சியும்)
>
> தொல்காப்பியர் 12 துறைகளையும், புறப்பொருள் வெண்பாமாலை 29 துறைகளையும் கூறிய உழிஞைத்திணைக்கு ஒரு பாடல் கூடப் புறநானூற்றில் இல்லை. ஆனால் நொச்சித்திணை எனப் பின்னூலார் கண்ட திணை ஆறு பாடல்களில் இடம்பெற்றுள்ளது (Pattabiraman, Durai, 2016))

இவற்றிலிருந்து, வைப்புமுறை மாற்றத்திற்கான தெளிவினை ஓரளவு ஊகித்தறிய இயலும். இந்நூலுக்கு ஒன்பது பதிப்புகள் வெளிவந்திருந்த போதிலும், எவற்றிலும் படலம் சார்ந்த அமைப்பில் வேறுபாடு ஏதும் காணப்படவில்லை. இதன் வாயிலாக, மதில் முற்றுகைக்குப் பின்னர்க் காத்தல் தொழிலைச் செய்த மரபு, முதலில் இருந்த பொருட்செல்வங்களைக் காத்த பின்னரே முற்றுகைச் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தது என்பது புலனாகிறது. ஆயினும், கரந்தைப்படலம் தனித் திணையாக உருப்பெற்றிருந்தாலும், அது முதன்மைப் பெறவில்லை என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

4. காஞ்சித்திணையின் கருத்தியல் மாற்றத்தின் பின்னணி

தொல்காப்பியத்தில் வாகைத்திணையை அடுத்துக் காஞ்சித்திணை அமைந்துள்ளது. போரில் அடைந்த வெற்றியின் பின்பு, நிலையற்ற வாழ்வின் யதார்த்தம் உணரப்படுகிறது. இந்த உண்மையைப் புலப்படுத்தும் நோக்குடன் இத்திணைக் கட்டமைக்கப்பட்டுள்ளது. உரையாசிரியர்கள் காஞ்சித்திணையினை நிலையாமைக் குறிப்போடு கூறுவதன் மூலம் தொல்காப்பியரின் கருத்தியலைக் காணலாம்.

> பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
>
> நில்லா உலகம் புல்லிய நிலைத்தே. (தொல். 76)

ஆனால் பிற்காலத்தில் எழுந்த புறப்பொருள் வெண்பாமாலைப் போர்த்திணையாக உருமாற்றம் செய்தது. அதனை,

> வேஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்
>
> காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று (பு. வெ. 60)

சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருந்தாலும், அடிப்படைக் கருத்தியலை நினைவுபடுத்தும் வகையில், பொதுவியல் படலத்தின் கீழ் நிலையாமைக் கருத்தியலை விளக்கும் காஞ்சித்திணை, காஞ்சிப் பொதுவியல் பால என மரபிற்கான அடிப்படையையும் உருமாற்றத்தையும் கருத்தில் கொள்கிறது.

> மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி
>
> ………………………………………….
>
> பொய் தீர் காஞ்சிப் பொதுவியல் பால (பு.வெ.பொதுவியல். 6)

ஆகவே, தொல்காப்பியர் காஞ்சித்திணையினை நிலையாமை எனவும் புறப்பொருள் வெண்பாமாலையில் போர்த்திணையாக (காஞ்சிப்படலம்) மாற்றம் பெற்றிருப்பினும் பொதுவியல் படலம் (காஞ்சிப் பொதுவியல் பால) நிலையாமையாகவும் குறிப்பிடுகிறார். இவற்றின் மூலம் சமூக மாற்றத்தினையும் மக்களின் மன மாற்றத்தினை அறியலாம்.

5. உரையாசிரியர்களின்

திணைவேறுபாட்டுச் சிந்தனைகள்

தொல்காப்பியரின் கருத்துகளை, மரபுசார்ந்த அணுகுமுறையிலிருந்து விலகாமல், மீண்டும் நிலைநிறுத்தும் வகையில் உரையாசிரியர்கள், நூலாசிரியரின் கருத்துகளுக்கு வலு சேர்க்கும் வண்ணம், செம்மையான முறையில் அமைத்தனர்.

> தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகத்திணை இயலுக்கு இணையாகப் புறத்திணை இயலை வைத்துள்ளார்.
>
> (தமிழ் இலக்கணமரபுகள் கி.பி.800-1400 இலக்கண நூல்களும் உரைகளும்.)
>
> திணைகள் ஒன்றுக்கொன்று புறனாயின என்ற விளக்கம் தொல்காப்பியத்தில் தரப்படவில்லை. உரையாசிரியர்கள் வலிந்து விளக்கம் கூறிச் செல்கின்றனர்
>
> (Vijayalakshmi, 2021)

உரையாசிரியர்களின் காலத்தில் பன்னிருபடலமும், அதன் வழிநூலான புறப்பொருள் வெண்பா மாலையும் சிறப்புடன் விளங்கின. மேற்கோள் பாடல்கள் வாயிலாக இதனை அறிய முடிகிறது. தொல்காப்பியரால் வகுக்கப்பட்ட ஏழு திணைகள், பன்னிரண்டு திணைகளாக மாற்றம் பெற்ற காலகட்டத்தில், மரபினை வலியுறுத்தும் நோக்கில் உரையாசிரியர்கள் செயல்பட்டனர். அகத்திணையியலில், "முற்படக் கிளந்த எழுதிணை" என்று குறிப்பிட்டதை அடிப்படையாகக் கொண்டு, பிற்பகுதியில் கூறப்படுவதும் ஏழு திணைகளே என அவர்கள் கருதினர். இதன் பொருள், புறத்திணையியலில் கூறப்படுவது பன்னிரண்டு திணைகள் அல்ல, மாறாக ஏழு திணைகள் என்பதேயாகும். இவ்விதம், பல்வேறு இடங்களில் மரபுகளை நிலைநிறுத்தும் அதே வேளையில், மாற்றங்களைச் சீர்திருத்தும் பணியைச் செய்தவர்கள் உரையாசிரியர்கள் ஆவர்.

முடிவுரை

தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியம் மரபிலக்கண நூல்களுள் முதன்மைப் பெற்றதாகத் திகழ்கிறது. தொல்காப்பியப் புறத்திணையியலும், சமூக வரலாற்றுப் பின்னணியில் உருமாற்றமடைந்த புறப்பொருள் வெண்பாமாலையினையும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மரபின் போக்கானது, அவ்வப்போது சமூகச் சூழல்களுக்கு ஏற்ப மாற்றம் அடைந்துள்ளதை அறியலாம். உரையாசிரியர்கள், பல்வேறு இடங்களில் மரபுகளை நிலைநிறுத்தும் அதே வேளையில், மாற்றங்களைச் சீர்திருத்தும் பணியைச் செய்தவர்கள். திணைப் பற்றிய விளக்கம், பொருள் மற்றும் படலம் பற்றிய சான்றுகளுடன் விளக்கப்பட்டது. திணைகளின் முறைமாற்றம் மற்றும் பொருண்மை மாற்றம் குறித்த உரையாசிரியர்களின் நிலைப்பாடுகள் விரிவாக விவரிக்கப்பட்டன. இதன் வழி, புறத்திணை மரபுகளையும் அவற்றின் உருமாற்றங்களையும் பற்றிய தன்மையினையும் சிறப்பினையும் இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

References

Ambika, Ve. (2023) "The Tradition of Tamil Grammar and the Background of Changes in Grammatical Tradition." *Tamil Language and Literature International Journal*, E-ISSN: 2581- 7140,Volume5,Issue 2, January.

Aravin, Mu. (2023) "Elements and Stages of the Development of Tamil Grammar." *Tamil Language and Literature International Journal*, E-ISSN: 2581-7140, Volume 5, Issue 2, January.

Naachimuthu, Ki. (1986). Doctor. Dr. U.Ve.Sa. *Grammar Publications*. Chennai: World Tamil Research Institute.

Pattabiraman, Durai. (2016). *Development of Purathinai*. Meyyappan Publications, Chidambaram.

Pazhanivelu, K. (2024). "Panuval and Urai: Political and Tolkappiyam Perspectives on Oral and Written Traditions." *Peyal Research Journal*, ISSN: 2394-0948, Peyal-10, Issue 01, October 2023-March. Tamilconcordance.in,tamilconcordance.in.

Raachaaram, Su. (2010). *Grammar Studies: Principles and Theories*. Kaalachuvadhu Publications, Nagercoil.

Raasu, Se. (2003). *U.Ve.Sa's Publishing Work and Multifaceted Influence*. World Tamil Research Institute, Chennai.

Sanmugam, Se.Vai. (2013). Formation of Grammar During the Pallava-Pandya Period. Adaiyaalam, Tiruchirappalli.

Seetharaman, Saravanajothi. (2020). "Arrilakkiyam and the Tradition of Dialectical Theory." *Valartamil Research Journal*, E-ISSN 2116-5507, Volume 1, Issue 1, June, pp. 29-38.

Sivalinganar, A. (2015). *Tholkappiyam - Poruladhikaaram, Uraivalam Puraththinaiyiyal*. Chennai:WorldTamil Research Institute.

Srinivasan, Ira. (2000). *Tamil Grammatical Traditions and Grammatical Texts and Commentaries from 800 to 1400 CE*. T. Parker, Chennai, 2000.

Suppurettiyar, N. (2002). *The Life Depicted by Tolkappiyam*. Palaniappa Brothers, Chennai.

Venkatasami, Mayilai Seeni. (2013). *Tamilakam Under Kalabhras Rule*. Chennai: World Tamil Research Institute.

Vijayalakshmi, Tha. (2021). "The Distinction Between Akam and Puram." *International Tamil Research Journal* (E-ISSN: 2582-1113), Volume 3, Issue 1, November, pp.32-41. https://doi.org/10.34256/irjt2114

Vijayalakshmi, T. (2021). "The Distinction Between Akam and Puram." *International Tamil Research Journal* (E-ISSN: 2582-1113), Volume 3, Issue 1, November, pp. 32-41. https://doi.org/10.34256/irjt2114.